தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**10 வயதுப்பிரிவு**
**(01.01.2016 – 31.12.2016 வரையில் பிறந்தோர்)**

## லெப்டினன்ட் கேணல் விக்ரர்

தமிழீழத்தின் மன்னார் மண் தந்த வீரத்தளபதி லெப்டினன்ட் கேணல் விக்ரர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தொடக்ககால உறுப்பினரான இவர், போராட்ட வாழ்வின் நெருப்பாறுகளைக் கடக்கின்ற நெஞ்சுரம் கொண்டவர்.

1983ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத்தலைவரின் நேரடி நெறிப்படுத்தலில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் பங்கெடுத்தவர். 1985ஆம் ஆண்டு மன்னார் சிங்களக் காவல் நிலையத் தாக்குதலை தீரமுடன் வழிநடத்தி வெற்றிகொண்டவர்.

மிகப்பெரும் விடுதலைப் போராட்ட அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளை நிலைநிறுத்த, தமிழீழத் தேசியத் தலைவருக்கு உறுதுணையாக நின்ற அடிக்கற்களுள் லெப்டினன்ட் கேணல் விக்ரரும் ஒருவர்.

இவரது வழிநடத்தலில் 1986 ஒக்ரோபர் பன்னிரண்டாம் நாள் மன்னார் அடம்பனில் பெண்கள் படையணி முதற்களம் கண்டது. இப்போர்க்களத்தில் பெண்கள் படையணியின் வீரமும் தீரமும் வெற்றி படைத்தது. இத்தாக்குதலில் தளபதி லெப்டினன்ட் கேணல் விக்ரர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவர் தமிழீழ விடுதலைப் போராட்டம் உருவாக்கிய பெருந்தளபதிகளுள் ஒருவர். தலைவரையும் மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்த பெருவீரன். இவரது நாற்பதாவது ஆண்டு நினைவில் நிற்கிறோம். அவரது ஒரே இலட்சியமாம் தமிழீழ தேசத்தை மீட்பது எம் எல்லோரதும் வரலாற்றுக் கடமையாகும்.

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”